# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in


**முன்னிலை: திரு.ஆ.தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண். 67 /2016**

திரு. Fr. ஜெ. ஜான் ஜோசப் கென்னடி,
செயின்ட் கிளமெண்ட்ஸ் எஜுகேஷனல் டிரஸ்ட்,
அருளகம்,
சகாயமாதா சர்ச்,
அஞ்சல் நகர், மதுரை – 18. . . . . . . மேல் முறையீட்டாளர்

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
மதுரை மின்பகிர்மான வட்டம் / பெருநகரம் ,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கே.புதூர்,
மதுரை – 625 007. . . . . .. எதிர்மனுதாரர்

**ஆணை நாள் : 30–9–2016**

1. திரு. Fr. ஜெ. ஜான் ஜோசப் கென்னடி, செயின்ட் கிளமெண்ட்ஸ் எஜுகேஷனல் டிரஸ்ட், மதுரை அவர்களின் 26.8.2016 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.67/2016 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மேற்கண்ட மேல்முறையீட்டு மனுவில் மின்மாற்றி இடமாற்றம் செய்வதற்காக செலுத்தப்பட்ட தொகைக்கு எந்தவொரு வேலையும் செய்யாத நிலையில் (ஆட்சேபனை இருந்ததால்) செலுத்தப்பட்ட தொகை ரூ.5,31,529/–ஐ திரும்ப வழங்க உத்தரவு இடவேண்டும் என்று மேல்முறையீட்டாளர் கோரியுள்ளார்.

3. மேற்கண்ட மேல்முறையீட்டு மனுவின் நகல் மேற்பார்வை பொறியாளர்/மதுரை மின்பகிர்மான வட்டம்/பெருநகர் அவர்களுக்கு இசைவிணக்கம் எதுவும் ஏற்படவில்லை எனில் பதிலுரை சமர்ப்பிக்க வேண்டும் என்று 7.9.2015 நாளிட்ட அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்பட்டது.

4. மேற்பார்வை பொறியாளர்/மதுரை மின்பகிர்மான வட்டம்/பெருநகரம் அவர்கள் தன்னுடைய 23/24–9–2016 நாளிட்ட கடிதத்தில் மேல்முறையீட்டாளருடன் இசைவிணக்க கூட்டம் 22.9.2016, 3.00 மணிக்கு மேற்பார்வை பொறியாளரின் அலுவலகத்தில் நடைபெற்றது என்றும், அப்பொழுது மேற்பார்வை பொறியாளரால் மின்மாற்றியை இடமாற்றம் செய்வதற்கு எடுக்கப்பட்ட முன்கட்ட நடவடிக்கைகள் மற்றும் பண்டக சாலையிலிருந்து பொருட்கள் எடுக்கப்பட்ட விபரம், அதனால் வாரியத்திற்கு ஏற்பட்ட செலவுகளின் மதிப்பீட்டு தொகை ரூ.21,666/– என்று தெரிவிக்கப்பட்டது என்றும், அந்த செலவினை ஏற்றுக் கொள்வதாக மேல்முறையீட்டாளர் சம்மதம் தெரிவித்து மீதித்தொகை ரூ.5,09,863/–ஐ மட்டும் திரும்ப பெறுவதற்கும் சம்மதம் தெரிவித்துள்ளார் என்று தெரிவித்து இருதரப்பினராலும் கையொப்பமிடப்பட்டுள்ள இசைவிணக்கத்தின் நகலையும் சமர்ப்பித்துள்ளார்.

5. மேற்பார்வை பொறியாளர்/மதுரை மின்பகிர்மான வட்டம்/பெருநகரம் அவர்கள் இருதரப்பினருக்கும் இசைவிணக்கம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளதால் அந்த இசைவிணக்கத்தின் உண்மை நகல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“மின்நுகர்வோர் மின்குறைதீர்ப்பாளர் (Ombudsman) அவர்களிடமிருந்து பெறப்பட்ட மேல்முறையீட்டு மனு எண்.67/2016 நாள் 26.8.2016 மீது விவாதம் .*

*நாள் – 22.9.2016* *மாலை 3.00 மணி*

*<u>கலந்து கொண்டவர்கள்.</u>*
*த.மி.ப.கழகம் சார்பில்*
1. *திரு. P. பாஸ்கர், B.E., M.Tech – மே.பா.பொறியாளர்/மதுரை பெருநகர் வட்டம்/மதுரை*
2. *திரு. J. பிரேமலதா, B.E.,(Hons) MCA., – செ.பொ.பொது /மதுரை பெருநகர் வட்டம்/மதுரை*
3. *திருமதி. ந. ஷப்னம், B.E., – உ.செ.பொ.மேலாண்மை, மதுரை பெருநகர் / மதுரை*

*<u>மனுதாரர் சார்பில் கலந்து கொண்டவர்கள்</u>*

1. *திரு. பாதர் ஜான் ஜோசப் கென்னடி (மனுதாரர்)* *கையொப்பம் XXX XXX*
2. *திரு. ஜார்ஜ் தாமஸ்* *கையொப்பம் XXX XXX*

*<u>விவாதிக்கப்பட்ட விபரங்கள்</u>*

*மேற்பார்வை பொறியாளர்/மதுரை பெருநகர் முன்னிலையில் மனுதாரர் மற்றும் அலுவலர்கள் முன்னிலையில் மின்குறைதீர்ப்பாளர் மனு எண்.67/2016ன் மேல் மின்குறைதீர்ப்பாளரின் கடித எண்.த.நா.மி.கு/கோ.மனு எண்.67/2016/அ.எண்.1180 நாள் 7.9.16 பத்தி எண் (3) குறிப்பிட்டுள்ளதாவது மனுவின் நுதல்பொருள் குறித்து விவாதிக்க மனுதாரர் திரு. ஜான் ஜோசப் அவர்கள் 22.9.2016 அன்று (3.00 PM) அதில் மனுதாரர் கலந்துகொண்டு அவர்தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.*

*மேற்பார்வை பொறியாளர்/மதுரை பெருநகர் அவர்கள் விளாங்குடிப் பிரிவில் மேற்சொன்ன வேலையை மேற்கொள்ள எடுக்கப்பட்ட முன்கட்ட நடவடிக்கைகள் மற்றும் பண்டக சாலையிலிருந்து பொருட்கள் எடுக்கப்பட்ட விபரத்தையும் அதனால் மின்வாரியத்திற்கு ஏற்பட்ட செலவுகளின் மதிப்பீட்டுத் தொகையை கணக்கிட்டு ஒரு கருத்துருவை மனுதாரரிடம் வழங்கினார்.(ரூ.21,663/–)*

*மனுதாரர் அக்கருத்துருவை பார்வையிட்டு மின்வாரியத்திற்கு தங்களது வேலையின் நிமித்தமாக (DCW WORK – TRANSFORMER SHIFTING) ஏற்பட்ட உண்மையான செலவினை தாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் என்று பதிவு செய்தார்.*

*இதன் காரணமாக ஒரு இசைவிணக்கம் ஏற்பட்டு மனுதாரர் ரூ.21,663/–ஐ தாங்கள் செலுத்திய தொகை ரூ.5,31,529/– லிருந்து கழித்து மீதத்தொகை ரூ.5,09,863/– பெற்றுக் கொள்ள சம்மதம் தெரிவித்துள்ளார்.*

*இவ்விணக்கத்தை மின்குறைதீர்ப்பாளருக்கு தெரிவித்து அவர் முன் ஒப்புக் கொள்ளவும் மேற்பார்வை பொறியாளர்/மதுரை பெருநகர் மற்றும் மனுதாரர் திரு. ஜான் ஜோசப் அவர்களாலும் தீர்மானிக்கப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டது.*

*இக்கருத்து மன்றத்தில் என்னால் பதிவு செய்யப்பட்டது.*

*ஒப்பம்/ xxx xxx*
*உ.செ.பொ/பொ.மே/மதுரை/பெருநகர்*

*படித்தறிந்து கையெழுத்திடப்பட்டது.*

*ஒப்பம்/ xxx xxx*
*மேற்பார்வை பொறியாளர்/*
*மதுரை/பெருநகர்/மதுரை*
*(P. பாஸ்கர்)*

*ஒப்பம்/ xxx xxx*
*மனுதாரர்*
*(திரு.ஜான் ஜோசப்)*

**6.** மேற்கண்ட இசைவிணக்கத்தின்படி மேல்முறையீட்டாளர் மின்மாற்றியை மாற்றி அமைக்க செலுத்திய தொகையான ரூ.5,31,529/–ல் மின்சார வாரியத்திற்கு அந்த வேலையின் காரணமாக ஏற்பட்டுள்ள செலவு தொகையான ரூ.21,663/–ஐ (சரியான செலவுத்தொகை ரூ.21,666/– ஆகும். இசைவிணக்கத்தில் ரூ.21,663/– என்று தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது) கழித்து மீதித்தொகை ரூ.5,09,863/–ஐ பெற்றுக் கொள்ள சம்மதம் தெரிவித்துள்ளார் என்று தெரிகிறது.

7. எனவே, எதிர்மனுதாரர் மேற்கண்ட இசைவிணக்கத்தின்படி ரூ.5,09,863/–ஐ (ரூபாய் ஐந்து லட்சம் ஒன்பது ஆயிரத்து எண்ணூற்றி அறுபத்தி மூன்று மட்டும்) மேல்முறையீட்டாளருக்கு இந்த ஆணை கிடைக்கப்பெற்ற 30 நாட்களுக்குள் திரும்ப வழங்க வேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

8. மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண்.67/2016 முடித்து வைக்கப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. Fr. ஜெ. ஜான் ஜோசப் கென்னடி,
செயின்ட் கிளமெண்ட்ஸ் எஜுகேஷனல் டிரஸ்ட்,
அருளகம்,
சகாயமாதா சர்ச்,
அஞ்சல் நகர், மதுரை – 18.

2) மேற்பார்வை பொறியாளர்,
மதுரை மின்பகிர்மான வட்டம் / பெருநகரம் ,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கே.புதூர், மதுரை – 625 007.

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
மதுரை மின்பகிர்மான வட்டம் / பெருநகரம் ,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கே.புதூர், மதுரை – 625 007.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

5) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர், சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – **மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.